# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# PERFORMANCE REPORT 2024



## මහා භාරකාර දෙපාර්තමේන්තුව
## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்
## DEPARTMENT OF PUBLIC TRUSTEE

# 2024

## කාර්යසාධන වාර්තාව
## செயலாற்றல் அறிக்கை
## PERFORMANCE REPORT

මහා භාරකාර දෙපාර්තමේන්තුව
**பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர்திணைக்களம்**
Department of Public Trustee

## *2024.12.31* இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## நிறுவனத்தின் பெயர் - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

## செலவுத் தலைப்பு- *205*

### உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரத் தொகுப்பு / நடைமுறைப்படுத்தல் பொழிப்பு

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

அத்தியாயம் 03 - ஆண்டின் முழுமையான நிதிச்செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை

அத்தியாயம் 06 – மனித வள விபரத்தொகுப்பு

அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை

## 01. அத்தியாயம் - நிறுவனத்தின் விபரத் தொகுப்பு / நடைமுறைப்படுத்தல் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

**பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியும் சட்ட அதிகாரமும்**

1931 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1938 ஆம் ஆண்டின் 59 இலக்க கட்டளைச் சட்டங்கள் மூலமும், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க மற்றும் 1975 இலக்கம் ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலமும், 1983 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க சட்டங்கள் மூலமும் திருத்தப்பட்ட 1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி, சுயாதீனமானதும் சுதந்திரமானதும் மற்றும் பொது இலச்சினையொன்றுடனுமான ஆளாக தாபிக்கப்பட்டுள்ளதுடன், பதவியின் பெயரில் வழக்குத் தொடரவும் மற்றும் தொடரப்படவும் சட்ட இயைபுடையதாகும்.

**சட்டப் பின்னணி**

இலங்கையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி சுயாதீனமானதும் சுதந்திரமானதும் மற்றும் பொது இலச்சினையொன்றுடனுமான ஆளாக சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெயரில் சுயாதீனமான சட்ட ஆள் ஒருவராக தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பொது நம்பிக்கைப்பொறுப்பாளர் பதவி மற்றும் நிறுவனமானது உரிய கட்டளை சட்டங்களுக்கேற்ப நிறுவகிக்கப்படும்.

1. 1931 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1938 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் மூலமும் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க மற்றும் 1975 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலமும், 1983 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க சட்டங்கள் மூலமும் திருத்தப்பட்ட 1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம்

2. 1938 ஆம் ஆண்டின் 04, 1934 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் மூலமும் 1968ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலமும், திருத்தப்பட்ட 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகும் என்பதுடன், அச்சட்டம் மௌனமாகவுள்ள சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சட்டத்தின் ஒப்புரவுக் கோட்பாடு ஏற்புடையதாகும். (LAW OF EQUITY)

3. இதற்கு மேலதிகமாக குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, நீதித்துறைச் சட்டம் மற்றும் ஏனைய எழுத்திலான சட்டங்கள் மூலமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கடமைப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

4. பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப மற்றும் ஏனைய எழுத்துமூல சட்டங்களுக்கு ஏற்ப பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரிடம் பின்வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான பொது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 10 (அ) ஆம் பிரிவுக்கு இணங்க ஊழியத்திற்காக வெளிநாடு செல்பவர்கள் வெளிநாட்டில் மரணிப்பார்களாயின் அவர்களுக்கு கிடைக்கும் நட்டஈட்டுத் தொகைகளை தங்கி வாழ்பவர்கள் மற்றும்/அல்லது சட்டபூர்வமான வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளித்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்காக இலங்கைக்கு வெளியே செல்லும் இலங்கைப் பிரசைகள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது மரணிக்கின்ற சந்தர்ப்பங்களில் ஏதேனும் நட்டஈடுகள் கிடைக்க வேண்டிய ஆட்களின் பெயர்களை பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் பதிவு செய்ய வைத்தல்.
- 1944 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க விகாரைகள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 1981 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பௌத்த விகாரைகள், தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுதல்.
- 1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இணைப்புச்செய்யப்பட்ட செய்தித்தாள்கள் கம்பெனிக்கான கம்பெனிப்பங்குகளின் பொறுப்புடைமை அரசால் பொறுப்பேற்கப்பட்டமை.

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணி

**<u>தொலைநோக்கு</u>**

1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் 1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இலங்கை குடியரசினுள் செல்லுபடியாகும் சட்ட வரையறையின் கீழ், நம்பகமான, பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படைத் தன்மையுடன், இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் அவருடைய பதவியணியினர் நல்லெண்ணத்துடன் தமது தொழில்சார் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல்.

**<u>பணி</u>**

இலங்கையில் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி மற்றும் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் பொறுப்புக்களும் சட்ட வரையறைக்குள் வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப்படுத்துதல் மற்றும் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் நம்பிக்கை வைத்து சேவைகளைப் பெறுவதற்கு வரும் தரப்பினருக்கு பக்கச் சார்பின்றியும் வினைத்திறனுடனும் அதிகபட்ச சேவையினை வெளிப்படைத் தன்மையும் தன்மையுடன் வழங்குதல் மற்றும் அதன்மூலம் இலங்கை பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைத்தளத்தின் நற்பெயரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேம்படுத்தும் விதத்திலும் பாராட்டப்படும் விதத்திலும் செயற்படுதல்.

## 1.3 பிரதான பணிகள்

**<u>பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் வகிபாகம்</u>**

பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம், குடியியல் வழக்கு நடவடிக்கைக் கோவை, நீதித்துறைச் சட்டம் மற்றும் ஏனைய எழுத்து மூலமான சட்டங்களின் அடிப்படையில் பின்வரும் பணிகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- சாதாரண நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்
- காப்புப் பொறுப்பாளராக அல்லது பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்.
- சொத்துக்களைச் சேகரித்தல் கட்டளையின் கீழ் சொத்துச் சேகரிப்பாளராகச் செயற்படுத
- பருவமடையாதவர்களின் சொத்துக்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது உதவி நண்பராக (பாதுகாப்பு முகாமையாளராக) செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றமொன்றினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்).
- புத்திசுயாதீனமற்ற ஆட்களின் சொத்து முகாமையாளராகச் செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றமொன்றினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்).
- அசையாச் சொத்துக்களின் ஒப்பந்த முகாமையாளராகச் செயற்படுதல். (பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராகச் உள்ள சந்தர்ப்பங்களில் அந்த நம்பிக்கைப் பொறுப்புக்களின் நியமிக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஊடாக காலத்துக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாத்திரம் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளர் கடமைப்பட்டுள்ளார்.)
- வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் அட்டர்னி தத்துவகாரராக அவர்களுக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை வழங்குவதற்காக அல்லது செலுத்துவதற்காகச் செயற்படுதல்.
- குடியியல் வழக்கு நடபடிமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றத்தினால் சொத்துக்கள் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்.
- நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பங்களில் உயில் எழுதப்படாத ஆளொருவரின் நிர்வாகியாகச் செயற்படுதல்
- குற்றமொன்றுக்காக சிறை தண்டனை அனுபவிப்பவர்களின் சொத்து முகாமையாளராகச் செயற்படுதல்.
- எவரேனும் ஆளொருவரின் உயிலைப் பாதுகாப்பாக வைத்திருப்பவராகச் செயற்படுதல்.

## பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் பொறுப்புக்கள் மற்றும் மரணச்சொத்துக்களின் எண்ணிக்கை

2024.12.31 ஆம் திகதிவரை திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் பொறுப்புக்களின் எண்ணிக்கை 1144 என்பதுடன் மரணச்சொத்துக்களின் எண்ணிக்கை 176 ஆகும்.

## 1.4 பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்

இந்தத் திணைக்களத்தினால் தாபிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் நோக்கங்களுக்கு ஏற்ப / மரணசாசனங்களில் உள்ள நோக்கங்களுக்கு ஏற்ப / நீதிமன்ற கட்டளைகளுக்கு ஏற்ப விடங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு சேவை வழங்கப்படுகின்றது.


- கல்வி கற்கும் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும் பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக புலமைப் பரிசில்கள் வழங்குதல்.
- அநாதரவான மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக மருத்துவ உதவிகளை வழங்குதல்.
- சமயத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்காக அமைக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின் குறிக்கோள்களின் அடிப்படையில் நிதியுதவி வழங்குதல்.

- அறக்கொடை அலுவல்கள்
- பல்வேறு காரணங்களினால் வாழ்வதற்குச் சிரமப்படும் அநாதரவான ஆட்களுக்கும் அத்தகைய ஆட்கள் உள்ள நிறுவனங்களுக்கும் உதவி வழங்குதல்.
- நம்பிக்கைப் பொறுப்புக்களை/மரணச் சொத்துக்களை முகாமை செய்தல்.
- விகாரைகள், தேவாலயங்கள் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட அசைசயாச் சொத்துக்களுக்கு கிடைக்கும் நட்டஈட்டுப் பணத்தை, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் பகிர்ந்தளித்தல்.
- வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பங்குகளின் நம்பிக்கைப் பொறுப்பை அரசாங்கத்தின் சார்பில் வைத்திருப்பதன் மூலம் அக்கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் மேற்பார்வை செய்தலும்.
- வெளிநாட்டு நட்டஈடாகக் கிடைக்கும் பணத்தை தங்கி வாழ்வோர் அல்லது சட்டரீதியான வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளித்தல்.
- ஓர் அரசாங்க நிறுவனம் என்ற வகையில் உழைக்கும் வருமானத்தில் குறிப்பிட்டதொரு சதவீதத்தை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினுள் பின்வரும் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

1. சமயப்பிரிவு
2. மருத்துவ உதவிப் பிரிவு
3. புலமைப்பரிசில் பிரிவு
4. தனிப்பட்ட பொறுப்புப் பிரிவு
5. விசாரணைகள் பிரிவு
6. பெருந்தோட்டப் பிரிவு
7. கணக்குப் பிரிவு
8. நிர்வாகப் பிரிவு
9. விகாரை நட்டஈட்டுப் பிரிவு
10. வெளிநாட்டு நட்டஈட்டு பிரிவு
11. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

# நிறுவன அமைப்பு - பொதுநம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம்



## அத்தியாயம் 02 –முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

## விஷேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### திணைக்களத் தலைவரின் அவதானிப்பு

இந்தத் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்கள் மேற்குறிப்பிடப்பட்ட 1.3 பந்தியின் மூலமும் அதன்கீழ் மேற்கொள்ளப்படும் சேவைகள் மேற்குறிப்பிடப்பட்ட 1.4 பந்தியின் மூலமும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் பிரதான கடமைப்பொறுப்புக்களாக பொறுப்புச் சொத்து நிர்வாகம் மற்றும் பொறுப்புக்களின் குறிக்கோளை அடைவதற்கான செயற்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதற்கமைய, பொறுப்புக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான செயற்றிட்டங்கள் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

#### 2.1 தோட்ட நிர்வாகம்

**இந்தத் திணைக்களத்தின் பொறுப்பு மரணசொத்தாக 10 தோட்டங்கள் நிருவகிக்கப்படுவதுடன் நாடுமுழுவதுமுள்ள தேயிலை, இறப்பர், தேங்காய், கறுவா மற்றும் வயல் போன்றன இத்தோட்டங்களில் பிரதானமான பயிராக பயிரிடப்படுகின்றன.** தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றுவந்த தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன்கீழ் இரண்டு தோட்டங்களை குத்தகைக்கு விடுவதற்கான செயற்பாடுகள் எல்லாம் நிறைவடைந்துள்ளன. ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டங்களை குத்தகைக்கு விடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய தோட்டங்களுக்கு வருமான இலக்குகளை வழங்கியுள்ளதுடன் பல்வேறுபட்ட உள்ளக நிர்வாக நுட்பங்கள் பின்பற்றப்படுவதன் ஊடாக செலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்கீழ் 2024 ஆம் வருடத்தினுள் செயற்பாட்டு இலாபம் ரூ.12,049,508.59 என அறிக்கையிடப்பட்டுள்ளது.

#### 2.2 சொத்துநிர்வாகம்

நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் அல்லது இறுதி விருப்பாவணத்தின் மூலம் உரித்தளிக்கப்பட்ட வீடுகள் மற்றும் ஏனைய ஆதனங்கள் இந்தத் திணைக்களத்துக்கு உரியதாக உள்ளன. அந்த ஆதனங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தின் மூலம் அந்த ஆதனங்களின் உரிமையாளர்களது குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றன. இதன்கீழ் அறக்கொடைகளை வழங்குதல் அல்லது அவர்களது பொறுப்பாளர்களைப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன. திணைக்களத்துக்கு உரித்தாகவுள்ள, இதுவரைக்கும் அடையாளங் காணப்பட முடியாதுள்ள ஆதனங்களைத் தேடிக்கண்டறிந்து பயன்பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேலும் ஆதனங்களைக் கண்டறிவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல தற்போதைக்குள்ள தகவல் முறைமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே அனுமதியின்றி கைப்பற்றுவது தொடர்பில் பொலிஸ், பிரதேச செயலாளர், நீதிமன்றம் போன்றவற்றின் உதவியுடன் தீர்த்துக்கொள்வதற்கான எதிர்கால படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.3 பொறுப்புஉதவிச் செயற்றிட்டங்கள்

இதன்கீழ் சமய, தனிநபர் பொறுப்பு, மருத்துவ உதவி மற்றும் புலமைப்பரிசில் போன்ற வகைகளிலான முறைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

இத்தகைய உதவிகள் குறித்த பொறுப்பு நிதியத்துக்கு கிடைக்கப்பெறுகின்ற நிதிகளுக்குக் கிடைக்கப்பெறும் வருடாந்த வட்டிப் பணத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றதுடன் வட்டி சதவீதம் குறைவடைவதன் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை முந்தைய வருடத்தைவிட சராசரியாக 2024 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.

**சமய நன்கொடை**

இறுதி விருப்பாவணம் மற்றும் பொறுப்புப் பத்திரங்களிலுள்ள நோக்கங்களின்படி சமயத்தளங்கள் மற்றும் சமயஞ்சார் நிறுவனங்களுக்கு சட்டரீதியாக உடன்படிக்கைக்கேற்ப கொடுப்பனவு செய்தல் மற்றும் நன்கொடைகள் வழங்குதல் இதன்கீழ் மேற்கொள்ளப்படும்.

- ❖ 2024.02.13 ஆம் திகதியன்று நடைபெற்ற திரு. டீ.பீ. ஜயதிலக்க அவர்களின் 156 ஆம் நினைவுநாளை முன்னிட்டு தர்ம போதனையொன்று நடாத்தப்பட்டு அவரின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டமை





- ❖ 2024.05.29 ஆம் திகதியன்று நடைபெற்ற திரு. டீ.பீ. ஜயதிலக்க அவர்களின் 80 ஆம் ஜனன தினத்தை முன்னிட்டு திணைக்கள வளாகத்தில் 1000 உணவுப்பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட தானநிகழ்வு நடாத்தப்பட்டது.
- ❖ மொனராகல மாவட்டத்தின் சியம்பலாண்டுவ மற்றும் மடுல்ல பிரதேச செயலகங்களின் குறைந்த வருமானமுடைய 40 குடும்பங்களுக்கு 10000/- ரூபா பெறுமதியான நன்கொடைப் பணம் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் தலைமையில் வழங்கப்பட்டது.
- ❖ யூ.ரீ.பீ.ரீ சில்வா அவர்களின் 13 ஆவது நினைவுதினத்தின் பொருட்டு அவரின் இறுதி விருப்பாவணத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2024.04.03 ஆம் திகதி சுமார் 35 பிக்குமார், பிக்குனிகளுக்கு அன்னதான நிகழ்வொன்று கௌரவ பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் தலைமையின் கீழ் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது.

### தனிநபர் பொறுப்பு உதவிகள்

- ❖ திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் இறுதி விருப்பாவணங்கள் மூலம் மரணசொத்துக்களின் நிறைவேற்றுனராக பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ள மரணசொத்துக்களில் பகுதியளவில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் மரண சொத்துக்களுக்குரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் பொதுவான குறிக்கோள் அல்லாத தனிப்பட்ட குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியங்களாகும். அதற்கமைய, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

- குவைட் கலாசார சங்க பொறுப்புநிதியத்தின் ஊடாக அங்கவீனமடைந்த இராணுவத்தினருக்கும் அவர்களில் தங்கிவாழ்வோருக்குமான உதவிகள் வழங்குதலை நோக்காக்கொண்டு தேசிய மற்றும் மேற்கத்தேய மருந்துகளை வழங்குதல் ( அபிமங்சல 01 மாத்தறை, அபிமங்சல 02 அனுராதபுரம்)




- ரெஜினா சம்பந்தநாதன் மரணச்சொத்தின் உரித்தாளரை நினைவுகூர்தற் பொருட்டு அவரின் பிறந்த ஊரான யாழ்ப்பாண மாவட்டத்தில் 40 ஏழைக்குடும்பங்களுக்கு 10000/- ரூபா வீதம் வழங்கப்பட்டமை

## மருத்துவ உதவிகள்

- இறுதி விருப்பாவணம் மற்றும் பொறுப்புநிதியங்களின் குறிக்கோளுக்கு அமைய மருத்துவமனைகள் மற்றும் நோயாளிகளுக்கு நிதி வசதிகள் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படுவதன் மூலம் பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்படுகிறது.
- சிசில் வனிகசூரிய நம்பிக்கைப்பொறுப்பின் 2024 ஆம் வருட குறிக்கோளை நிறைவேற்றும்பொருட்டு 1,244,406/- பெறுமதியான ஔடதங்கள் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 2024.03.05 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டது.



## புலமைப்பரிசில்

நம்பிக்கைப்பொறுப்பின் இறுதிவிருப்பாவணத்தின் பிரதான குறிக்கோள் புலமைப்பரிசில் வழங்குதல் என குறிப்பிடப்பட்டு நிறுவப்பட்டதே நம்பிக்கைப்பொறுப்பு நிதியமாகும். அதற்கமைய இறுதி விருப்பாவணங்களில் குறிக்கோள் நிறைவேற்றல் என்பதன் கீழ் இடம்பெறுவதுடன் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அத்துடன் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

## 2.4 **வெளிநாட்டு இழப்பீடு**

வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்கள் மரணமடைதல் மற்றும் அங்கவீனமடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்காகக் கிடைக்கும் இழப்பீடு பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்துக்குக் கிடைக்கிறது. அவை உரிய பின்னுரித்தாளர்கள் மற்றும் தங்கிவாழ்வோரை அடையாளம் கண்டு வழங்கப்படுகிறது. இந்த முறையில் 2024 ஆம் ஆண்டில் 399,201,565.44 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

## 2.5 **விகாரை இழப்பீடு**

1944 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க விகாரை காணி இழப்பீட்டு கட்டளைச் சட்டத்துக்கு அமைய வழிபாட்டிடங்களுக்குச் சொந்தமான காணிகளை அரச கருமங்களுக்காக கையகப்படுத்தும் போது வழங்கப்படும் இழப்பீட்டுப் பணம், பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் மற்றும் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரத்துக்கு அமைய செலுத்துதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2024 ஆம் ஆண்டில் 247,974,815.78 ரூபா பணம் விகாரை இழப்பீடாக செலுத்தப்பட்டுள்ளது.

## 2.6 **சட்டரீதியான செயற்பாடுகள்**

இந்த ஆதனங்களின் மரண சொத்துக்கள் தொடர்பான பல வழக்குகள் இடம்பெறுகின்றன. நீதவான் நீதிமன்றில் 03 வழக்குகள், மாவட்ட நீதிமன்றில் 99 வழக்குகள், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் 06 வழக்குகள், உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகள், கமநல நியாயசபையில் 47 வழக்குகள் என்ற வகையில் தற்போது 140 வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டம் மற்றும் விசாரணை என தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## 2.7 **அரச வருமானத்துக்கு பணம் செலுத்துதல்**

1990 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 944ஃ7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மூலதனக் கட்டணம், வருமான கட்டணம், முதலீட்டுக் கட்டணம், நம்பிக்கைப்பொறுப்புக் கட்டணம், சேவைக் கட்டணம் மற்றும் திணைக்களக் கட்டணம் என்றவாறு நம்பிக்கைப்பொறுப்பு நிதியங்கள் மற்றும் மரண சொத்துக்களிலிருந்து அறவிடப்பட்டு அரச கட்டண பணமாக மாதாந்தம் அரச வருமானத்துக்கு வரவு வைக்கப்படுகின்றது. அதற்கமைய 2024 ஆம் ஆண்டில் 41,347,803.32 ரூபா பணம் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

கிஹான் பிளபிட்டிய
இலங்கை பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர்

**03. அத்தியாம் 03 – 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

**3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று (ஏசீஏ- எப்)**

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 ரூ | | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூ | உண்மை நிலை 2023 ரூ | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 60,486,000 | 55,751,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புகள் | | 21,726 | 57,070 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 5,431,469 | 6,028,195 | ஏசீஏ -5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **65,939,195** | **61,836,265** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ)+(ஆ)** | | **65,939,195** | **61,836,265** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 9,593,466 | 375,521 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **56,345,729** | **61,460,744** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 56,708,600 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்; | 5 | 55,898,780 | 40,921,359 | ஏசீஏ - 2(ii) |
| 36,704,000 | ஏனைய பொருட்கள்; சேவைகள் | 6 | 35,641,415 | 31,793,980 | ஏசீஏ - 2(ii) |
| 328,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 327,063 | 252,977 | ஏசீஏ - 2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ - 2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **93,740,600** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **91,867,258** | **72,968,316** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மூலதன செலவினம்** | | | | |
| 3,000,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 1,599,166 | 2,731,852 | |
| 3,868,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 1,125,731 | 1,625,913 | **ஏசீஏ - 2(ii)** |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 500,000 | திறன் விருத்தி | **14** | 447,209 | 333,962 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | - | - | |
| **7,368,000** | **மொத்த மூலதனம்; செலவினம் (எ)** | | **3,172,106** | **4,691,727** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 21,726 | 57,070 | **ஏசீஏ -4** |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 4,272,499 | 6,305,186 | **ஏசீஏ -5** |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 4,294,225 | 6,362,256 | |
| | **மொத்த செலவினம் ஐ =(ஊ+எ+ஏ)** | | 99,333,589 | 84,022,299 | |
| **101,108,600** | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(42,987,860)** | **(22,561,555)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | #REF! | (22,561,555) | **ஏசீஏ -7** |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | 240,852 | - | **ஏசீஏ -3** |
| | | | **(42,987,860)** | **(22,561,555)** | |

*3.2* **நிதி நிலைமைக் கூற்று**

ஏசீஏ-பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 55,371,111 | 54,245,380 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5அ | 10,231,896 | 11,390,866 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ-3 | 240,852 | - |
| மொத்த சொத்துக்கள் | | 65,843,859 | 65,636,246 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 10,231,896 | 11,390,866 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 55,371,111 | 54,245,380 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5ஆ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 240,852 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 65,843,859 | 65,636,246 |

பக்க இலக்கம் 8 முதல் 26 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 27 முதல் 43 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குத் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2024 **ஆம் ஆண்டின்** 16.12.2024 **திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள்** 150 மற்றும் 151 **ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்றிறனை மீளாய்வு செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி: 2025-02-25

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி: 2025.02.25

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி: 2025-02-24

A.M.P.M.B. Atapattu
Secretary
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs
No. 135, Srimath Anagarika Dharmapala Mawatha,
Colombo 07.

GIHAN PILAPITIYA
PUBLIC TRUSTEE OF SRI LANKA
DEPARTMENT OF PUBLIC TRUSTEE
NO. 02, BULLERS LANE,
COLOMBO 07.

H. A. C. P. Dharmarathne
Chief Accountant
Department of Public Trustee
No. 02, Bullers Lane,
Colombo 07.

2

3.3 2024 **டிசம்பர்** 31 **இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் பற்றியகூற்று (ஏசீஏ- சீ)**

| | உண்மை | |
|---|---|---|
| | **2024** | **2023** |
| | **ரூபா** | **ரூபா** |
| **<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 44,314,925 | 23,009,495 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 60,486,000 | 55,751,000 |
| முற்பணங்களை அறவிடல் | 4,400,646 | 6,305,542 |
| வைப்புக்களின் பெறுகை | 21,726 | 57,070 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **109,223,297** | **85,123,107** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 91,648,708 | 72,796,916 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 514,792 | 1,124,542 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 9,593,466 | 375,521 |
| முற்பணக் கொடுப்பனவு | 4,272,499 | 6,077,331 |
| வைப்புக் கொடுப்பனவு | 21,726 | 57,070 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **106,051,191** | **80,431,380** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **3,172,106** | **4,691,727** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள்; | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **-** |

| | | |
|---|---|---|
| **<u>கழி – காசு செலவளித்தல்:</u>** | | |
| பௌதிக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது விலைக்கு வாங்கல் மற்றும் ஏனைய முதலீட்டு கையகப்படுத்துதல்கள் | 3,172,106 | 4,691,727 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மொத்த காசுப்பாய்ச்சல் (உ)** | **4,691,727** | **2,378,304** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(3,172,106)** | **(4,691,727)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | - | - |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள்; | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (ஏ)** | - | - |
| **<u>கழி – காசு செலவளித்தல்:</u>** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு செலவழிக்கப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (ஓ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.4 அறிக்கையிடலின் அடிப்படை

1) **நிதிக் கூற்றுக்களுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்கள், அரச நிதி ஒழுங்குவிதிகள் 150 அத்துடன் 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்குரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.

3) **அளவிடல் அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு சிலசொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் ஆகியவற்றை அடையாளங்காணல் மற்றும் அளவீடு**

சொத்துக்களுக்கேற்ப எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்துக்குக் கிடைக்கின்றமை குறித்து உறுதிப்பாடொன்று இருக்கும்போது மற்றும் குறித்த சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்பட முடியுமாயின் அத்தகைய சொத்துக்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படும். அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கிரயத்துக்குள் அடையாளங்காணப்படுவதுடன் கிரயமுறைக்கு பொருத்தமற்ற சந்தர்ப்பத்தில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படும்.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரணகணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டுநாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களைஉள்ளடக்கியதாகும்.

- ❖ ஓர் அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விசேடமான கொடுக்கல்வாங்கல்கள் இருக்கும் சந்தர்ப்பங்களில், குறித்த படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அதேபோல,அந்த குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்களை "அறிக்கையிடல் அடிப்படை"யின் கீழ் சேர்க்கலாம்.

- ❖ தமது அறிக்கையிடும் நிறுவனத்துக்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மாத்திரம் அறிக்கையிடல் அடிப்படையின்கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

## 3.5 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை (ரூபா. ,000)

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுமதி மதிப்பீடு | தொகை | இறுத வருமான மதிப்பீட்டின் % ஆக |
| 2002.02.99 | வட்டி, ஏனையவை | 475 | 475 | 475 | 100% |
| 2003.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் ஏனைய பெறுகைகள் | 14,500 | 14,500 | 41488 | 285% |

## 3.6 ஒதுக்கபட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதலின் செயலாற்றுகை (ரூபா. ,000)

| ஏற்பாட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உள்ளபடியான செலவு | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், பூர்த்தி செய்யப்பட்ட ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| **மீண்டெழும்** | 83,000 | 93,741 | 91867 | 98% |
| **மூலதன** | 6,000 | 7,368 | 3,172 | 43% |

### 3.7 நி.பி. 208 இற்கு இணங்க, ஏனைய அமைச்சுக்களின்/ திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாணசபைகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

ரூபா ,000

| தொடர் இலக்கம் | ஏற்பாடு கிடைத்த அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாட்டின் குறிக்கோள் | ஏற்பாடு | | உள்ளபடியான செலவு | பயன்படுத்தப் பட்ட ஏற்பாடுகள், வழங்கிய இறுதி ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| - | - | - | - | - | - | - |

### 3.8 நிதியல்லா ஆதனங்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை ரூபா ,000

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2023.12.31 இல் உள்ளவாறான பொருட்தொகை மதிப்பாய்வு அறிக்கைக்கு இணங்க மீதி | 2023.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அறிக்கைக்கு இணங்க மீதி | எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படவுள்ளவை | முன்னேற்றம் % ஆக அறிக்கைப்படுத்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | - | - | - | - |
| 9152 | இயந்திரங்கள் | 55,371 | 55,371 | - | 100% |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டுணர முடியாச் சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | செய்யப்பட்டு வரும் வேலைகள் | - | - | - | - |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் | - | - | - | - |

**<u>தேசிய கணக்காய்வு அலுவலகம்</u>**

எனது இலக்கம் :சீஏஜ/ஈ/டீபீரீ/02/2024/02 திகதி :2025 ஏப்ரல் 23

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்
பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**தலைப்பு 205 - பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சாரம்ச அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிலைப்பாடு

தலைப்பு 205 - பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தின் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் பற்றிய கூற்றுக்களைக் கொண்டு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(l) ஆம் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கருத்து வெளிப்படுத்தல்கள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு அதிகாரிக்கு வருடாந்தம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை சமகாலத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை சமகாலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களில் உள்ள பாதகங்களை விடுத்து, நிதிக் கூற்றுக்களில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கு உரியவாறு குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றைத் தயாரிக்கும் அடிப்படைக்கமைய எல்லா அளவுசார் தன்மைகளுக்குமேற்ப நியாயமான நிலையொன்றை வெளிப்படுத்துகின்றது என்பதுவே நான் கொண்டிருக்கும் கருத்தாகும்.

### 1.2 நிலைமதிப்பிடப்பட்ட கருத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து நிலைமதிப்பிடப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு (இ.க.த) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிக்கூற்று தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என்னுடைய கருத்துக்கான அடிப்படை ஒன்றை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவையும் உசிதமானவையும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும்.

1.3 **விடயமொன்றை அவதானிப்புக்கு உட்படுத்தல் - நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இன் பக்கம் கவனத்தைச் செலுத்துகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரச நிதிப் பிரமாணங்களான 150 மற்றும் 151 அத்துடன் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இற்கு இணங்க பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்குப் பொருத்தமாக இருக்காது. எனது அறிக்கை பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம், பொதுத் திறைசேரியின் மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பயன்பாடுகளை மாத்திரம் நோக்காகக்கொண்டது. இந்த விடயம் தொடர்பில் எனது கருத்து மாற்றியமைக்கப்படாது.

1.4 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

அரச நிதிப் பிரமாணங்களான 150 மற்றும் 151 அத்துடன் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இற்கு இணங்க எல்லா அளவுத்தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமையொன்று காணப்படுமாற்போல் நிதிக்கூற்று தயாரித்தல் அத்துடன் மோசடி மற்றும் பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுத்தன்மைகள் போலியான கூற்றுக்களின்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவகையில் தேவைப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்துக்கேற்ப நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சுய வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டுக்கென பயனுறுதிவாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயார்செய்து கொண்டுநடாத்தப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் செயற்றிறன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வு ஒன்றை மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையைப் பயனுள்ளதாக கொண்டுநடாத்தத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.5 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்.**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் கணிசமானளவு பொய்யான கூற்றுக்களின்றி காணப்படுவதாக நியாயமான சான்றுறுதியொன்றை வழங்குவதும் எனது கருத்துக்களை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதியை வழங்குதலானது, உயர்தரத்திலான உறுதி ஒன்றை வழங்குதலாக அமைகின்றபோதிலும் இலங்கை கணக்காய்வு தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது, அது எப்போதும் கணிசமானளவு பொய்யான கூற்றுக்களை இனங்கண்டு கொள்கின்றது என வழங்கும் உறுதி ஒன்றாக அமையாது. ஊழல் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது இணைந்தோ செல்வாக்குச் செலுத்துவதனால் கணிசமானளவு பொய்யான கூற்றுக்கள் உருவாகலாம் என்பதுடன், அதன் அளவுத்தன்மையானது இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சிக்கப்படுபவர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான செல்வாக்கின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் அடிப்படையில் கணக்காய்வின் பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்கள் போன்றவற்றுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வுக் கருத்துக்கு அடிப்படை ஒன்றை வழங்கும்போது ஊழல் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான அளவிலான பொய்யான கூற்றுக்கள் உருவாகக்கூடிய இடங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றுக்கென சமயோசிதத்துடன் உசிதமானமுறையில் கணக்காய்வு

நடவடிக்கைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. கூட்டுநடவடிக்கை மூலம், போலியான ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே தவிர்த்தலின் மூலம், தவறாகக் காட்டுவதன் மூலம் அல்லது உள்ளக நிர்வாகத்தைத் தவிர்ப்பதன் மூலம் ஆகிய காரணங்களினால் தவறாகக் காட்டப்பட்டமை காரணமாக ஏற்படும் கணிசமானளவு பொய்யான கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கங்கள் கடுமையானதாக அமைகின்றன.

- உள்ளக நிர்வாகத்தின் செயற்றிறன் பற்றிய கருத்தொன்றை வெளிப்படுத்தும் எண்ணம் இல்லாதிருந்தாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துக்குக் காரணமாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடுக்கப்பட்டிருப்பதை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு ஏதுவாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டிருப்பதையும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்கள் மதிப்பிடப்பட்டன.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டறிதல்கள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரை அறியச்செய்தேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தல்

### 1.6.1 நிதிசாரா சொத்துக்கள்

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த உரித்துக்களை பொறுப்பெடுத்திருந்த இரு வாகனங்களுக்குரிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களுக்குள் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

நிதி ஒழுங்குவிதிகள் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திணைக்களத்தினால் பிணை வைக்க வேண்டிய எல்லா அலுவலர்களினதும் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட பிணை ஆவணமொன்றைப் பேணுவதற்கு 2024 ஆம் ஆண்டுவரை திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படும் விடயங்களை நான் அறிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் பொருந்துகிறது.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் வழங்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த வருடத்துக்குரிய அறிக்கையின் பந்தி குறிப்பு | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தி குறிப்பு |
|---|---|---|
| 1.6.2 | நிதி ஒழுங்குவிதிகள் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்குகின்றவாறு பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் குறித்து பிணை ஆவணமொன்று பேணப்படுதல் வேண்டும். | 1.6.2 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவு முகாமைத்துவம்

(அ) ஒரு மீண்டெழும் செலவுத்தலைப்பு மற்றும் மூன்று மூலதனச் செலவுத்தலைப்புக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 6,000,000 ஒதுக்கீட்டில் ரூ. 3,368,246 மீதியாகி இருந்ததுடன் அந்த மீதி, நிகர ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 20 உம் நூற்றுக்கு 98 உம் என்ற இடைவெளியைக் கொண்டிருந்தது.

(ஆ) 205-01-1-0-1002 மீண்டெழும் செலவுத்தலைப்புக்கென ரூ. 450,000 நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த போதிலும் நிகர ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 26 ஆன ரூ. 156,960 மீதமாகி இருந்ததுடன் 215-1-1-0-2103 மூலதன செலவுத்தலைப்புக்கென நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூ. 1,368,000 இல் ரூ. 1,265,834 மீதமாகி இருந்ததுடன் அது நிகர ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 53 ஆகும். அதன்படி சரியான அறிதலுடன் நி.பி. மாற்றப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பொறுப்பு மரணச்சொத்துக்கு உரித்தான வீடொன்றில் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்கள அலுவலகத்தைக் கொண்டுநடாத்துவதுடன் அதன் சீராக்கப் பணிகள் டி.பி. ஜயதிலக்க பொறுப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருப்பினும் 205-1-1-1-0-2001 இற்கென ரூ. 1,000,000 ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் வருடத்தினுள் ரூ. 198,212 மாத்திரம் செலவளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சரியான அறிதலுடன் அடிப்படை செலவுமதிப்பீடு தயாரிக்கப்படாமை காரணமாக திணைக்களத்தின் 2024 ஆண்டின் வருடாந்த செலவுமதிப்பீட்டில் செலவுக்குறிப்பு இலக்கங்களான 1002, 1003, 1202(2), 1202(9) மற்றும் 2103 இற்கான மொத்தம் ரூ. 20,650,000 ஆகிய செலவுமதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு போதாமை காரணமாக நி.பி. 66 இன்கீழ் மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீட்டின்கீழ் முறையே ரூ. 3,523,000 மற்றும் ரூ. 9,308,600 மாற்றப்பட்டிருந்தது. அதை அடிப்படை செலவுமதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 24 இலிருந்து நூற்றுக்கு 300 வரையான இடைவெளியொன்றை ஏற்படுத்தியிருந்தது.

### 3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் நிதி நிர்வாகத்துக்கான பயனுறுதிமிகு உள்ளக முறைமையொன்று தயாரிக்கப்பட்டு கொண்டுநடாத்தப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் பயனுறுதி குறித்து காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப முறைமை பயனுறுதிமிகுந்தவாறு கொண்டுநடாத்தப்படுவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனவும் அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தபோதும் அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டமைக்கான வெளிப்பாடுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்துக்குள் தயாரிக்கப்படுகின்றமை குறித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் உட்பொருளுக்கு ஏற்ப வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்துற்கொள்ள வேண்டும் என்றாலும், அறிக்கையின் 4.1.2 பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக குறித்த தேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்காதிருத்தல்

| | சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுக்கான குறிப்பு<br>---------------------------------------------- | இணங்காமை<br>------------------------------ |
|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் உப பிரிவு | ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய, இரண்டு வருடங்களைத் தாண்டிய ரூ.137,500 ஐக் கொண்ட பணம் மற்றும் ஒரு வருடத்தைத் தாண்டிய ரூ. 169,000 ஐக் கொண்ட கடன் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நிதி ஒழுங்கு 1645 | ஒவ்வொரு வாகனத்துக்குமென லொக் குறிப்புப் புத்தகம் பயன்படுத்தப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினால் பேணப்பட்ட லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (இ) | நிதி ஒழுங்கு 1647 (ஆ) | வுாகனங்கள் மற்றும் உபகரணங்கள் குறித்த நிதிப் பிரமாணம் 858 மற்றும் நிதிப் பிரமாணம் 859 இற்கு ஏற்ப அலுவலர் ஒருவரிடமிருந்து இன்னோர் அலுவலருக்கு வாகனத்தின் பாதுகாப்பை ஒப்படைக்கும்போதும் சாரதிகள் குறித்து மாற்றம் ஏற்பட்ட உடனேயும் அத்தகைய ஆய்வொன்றை நடாத்த வேண்டுமெனினும் திணைக்களம் வாகனம் தொடர்பாக ஆய்வொன்றை இதுவரை நடாத்தி இருக்கவில்லை. |
| (ஈ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கத்தைக் கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வோர் எரிபொருள் பரீட்சிப்புக்குப் பின்னரும் 12 மாத காலத்துக்குப் பிறகு அல்லது கிலோ மீற்றர் 25,000 தூரம் அளவில் ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான முக்கிய புதுப்பித்தலுக்குப் பின்னர் எனவரும் காரணங்களுள் முதலில் வருகின்ற சந்தர்ப்பத்துக்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் எரிபொருள் பயன்பாட்டின்போது மாற்றங்களை இனங்காண்பதற்கென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்த போக்குவரத்துச் சேவைக் குறிப்பு முழுமைப்படுத்தப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | கேள்விமனு வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் பிரிவு | கேள்விமனு உருவகத்தினால் பிரதான கேள்விமனுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 வருடங்களுக்கென எதிர்பார்க்கப்படும் கேள்விமனு நடவடிக்கைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினால் மீளாய்வு ஆண்டுக்குரியவாறு மாத்திரம் கேள்விமனு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 4. செயற்பாடுகளுக்கான மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1. திட்டமிடுதல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவுக்கு இணங்க ஒவ்வொரு வருடத்துக்கெனவும் அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மாதிரி செலவறிக்கையைச் செயற்படுத்த அடுத்துவரும் வருடத்துக்கான செயல்திட்டம், நடப்பாண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து அனுமதியைப் பெற வேண்டுமாயினும், 2024 ஆம் வருடத்துக்கான செயல்திட்டத்துக்கான அனுமதி 2024 பெப்ரவரி 01 ஆம் திகதியே பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவுக்கு இணங்க உரிய படிவத்துக்கு ஏற்ப செயல்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனினும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் செயற்பாடுகள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கேற்ப பொறுப்புச்சொல்லக்கூடிய உத்தியோகத்தர் பெயரிடப்படாமல் இருந்ததுடன் சுற்றறிக்கைக்கு ஏற்ப செயலாற்றுகைச் சுட்டிகள் இனங்காணப்பட்டு செயல்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

(அ) 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47 (4) ஆம் உப பிரிவுக்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டியிருப்பினும் 2023 ஆம் வருடத்துக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024 நவம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவுக்கு இணங்க மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை வரைபு, திணைக்களத்தின் மீளாய்வு வருடத்தின் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தினால் 2025 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கை வரைபு, 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின்படி அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

2022 ஜனவரி 25 ஆம் திகதிய 4/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஈ) ஆம் பிரிவின்படி வாகனங்கள் உரியவாறு பயன்படுத்தல் மற்றும் தேவைக்கேற்ப தாமதியாது அகற்றுதல் செய்ய வேண்டியிருந்த போதும் திணைக்களத்துக்குரிய ஓட முடியாத நிலையிலுள்ள இரண்டு வாகனங்கள் தொடர்பாக அதற்கேற்ப செயற்படாது குறித்த இரு வாகனங்களுக்கும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.426,660 செலவு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.3 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதியொழுங்கு விதிகளின் நிதி ஒழுங்கு 880 இன் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச்சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்துக்கு ஏற்ப பிணை வைக்கவேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

திணைக்களத்துக்குரிய வாகனமொன்று 2007 ஜனவரி 27 ஆம் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாகவுள்ள ரூபா 254, 038 பெறுமதியான நட்டத்தை உரிய சாரதியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு குறித்து தொடர்செயற்பாடு மேற்கொள்ளப்படாமை காரணமாக காலவிதிப்பின் அடிப்படையில் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன், விபத்து ஏற்பட்டு 17 வருடங்கள் கடந்த போதிலும் குறித்த நட்டத்துக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டிய ஆளிடமிருந்து அறவிடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களித்தின் கீழ் காணப்படும் புராதன பெறுமதிகொண்ட களுத்தறை பலாத்தொட்டவில் அமைந்துள்ள றிச்மன்ட் காசல் கட்டடம் உரிய காலத்தினுள் முறையாக பராமரிக்கப்படாததுடன் புனரமைக்கப்படாததாலும் கூரையினூடாக நீர் கசிந்து சுவர்கள் பழுதடைந்துள்ளமை காரணமாக புதுப்பித்தலுக்கென 2023 ஆகஸ்ட் மாதம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் தர அறிக்கையொன்று பெறப்பட்டு இருந்த போதிலும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிவரைக்கும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனத்தை செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பு என்பன திணைக்களத்தின் கடமைப்பொறுப்பாக இருப்பினும் அதனை திணைக்களம் நிறைவேற்றுவதில்லை என்பதுடன் குறித்த கடமையானது திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டியொன்றாக அடையாளம் காணப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 இணைக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியினர் மற்றும் உள்ளபடியான பணியாட்தொகுதியினர்

(அ) மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 77 என்றாலும் உள்ளபடியான பணியாட்தொகுதியினர் 67 ஆகும். அதற்கேற்ப, 10 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்படுகின்றது.

(ஆ) 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 5 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள எல்லா உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையங்களில் பணியாற்றுவதற்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினுள் 5 வருடங்களைக் கடந்த 25 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

ஒப்பம்: ஆர்.எஸ். கட்டுகம்பல
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர்
வேலைபார்த்தல் கணக்காய்வாளர் அதிபதிக்காக

## 04 அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

**நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)**

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக *(%)* உள்ளபடியான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | **100%- 90%** | **75%-89%** | **50%- 74%** | **50%** இற்குக் குறைந்த |
| 1. புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் | 108% | - | - | - |
| 2.மருத்துவ கொடுப்பனவுகள் | - | - | 67% | - |
| 3.சமயத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான கொடுப்பனவு | - | - | | - |
| 4. தர்மக் கொடுப்பனவுகள் | - | 85% | - | - |
| 5. அநாதரவுக் கொடுப்பனவு | - | 75% | - | - |
| 6.தனிப்பட்ட பொறுப்புக் கொடுப்பனவுகள் | 120% | 70% | - | - |
| 7. நிதியத்தின் நோக்கங்களின்படி பிற கொடுப்பனவுகள் | 189% | - | - | - |
| 8. விகாரை இழப்பீடுகளை விடுவித்தல் | 100% | - | - | - |
| 9. வெளிநாட்டு இழப்பீடுகளை விடுவித்தல் | 90% | - | - | - |
| 10. பெருந்தோட்ட முகாமைத்துவம் | 135% | - | - | - |

*** விகாரை இழப்பீடுகளை விடுவித்தலானது கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

## 05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் (SDG) அடைவுச் செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

| **இலக்கு/ குறிக்கோள்** | **இலக்கு** | **வெற்றிச் சுட்டிகள்** | **இதுவரை பெற்ற வெற்றிகளின் முன்னேற்றம்** | | |
|---|---|---|---|---|---|
| | | | **0%-49%** | **50%-74%** | **75%-100%** |
| சமத்துவமான, தரமான கல்வி | புலமைப்பரிசில் வழங்குதல் | புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கை | - | - | 108% |
| சுகாதார மேம்படுத்தல் | நோயாளிகளுக்கு உதவி வழங்குதல் | நோயாளிகளின் எண்ணிக்கை | - | 67% | - |
| பிராந்திய சுற்றாடல் கட்டமைப்பை பாதுகாத்தல் | கருணைக்கொடை செலுத்துதல் | கருணைக்கொடை பெறுவோரின் எண்ணிக்கை | - | - | 75% |
| வறுமையை ஒழித்தல் | ஆதரவற்றோர் கொடுப்பனவு செலுத்துதல் | ஆதரவற்றோர் கொடுப்பனவு பெறுவோர் எண்ணிக்கை | - | 70% | - |
| சமாதானமான, நியாயமான நிறுவனத்தை உருவாக்குதல் | நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டிடங்களுக்கு உதவிவழங்குதல் | சமய வழிபாட்டிடங்களின் எண்ணிக்கை | - | - | 85% |

**5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் அடைவுகள் மற்றும் சவால்களைச் சுருக்கமாக விளக்குக.**

## 06 அத்தியாயம் - மனித வள விபரக் குறிப்பு

### 06.1 பதவியணி முகாமை

| | அனுமதியளிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/ (மேலதிகம்)** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 08 | 07 | 01 |
| மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| இரண்டாம் நிலை | 50 | 43 | 07 |
| ஆரம்ப நிலை | 17 | 15 | 02 |

சிரேஷ்ட மட்ட சட்ட அலுவலர் பதவிக்கு (திணைக்களஞ்சார்) அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுடன் அதற்கென அலுவலர் ஒருவரை இணைத்துக்கொள்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை மட்டங்களிலான பதவிகளுக்கான வெற்றிடங்களை பூரணப்படுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### 06.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதனை சுருக்கமாக குறிப்பிடுக.

நம்பிக்கைப்பொறுப்பு திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 77 ஆக காணப்படுவதுடன், அவற்றுள் இதுவரைக்கும் 10 வெற்றிடங்கள் நிலவுகின்றன. மேலும் திணைக்களத்துக்கென இணைக்கப்பட்டுள்ள பதவிகளை வகிக்கின்றவர்களுக்கு தனிப்பட்டவாறான (முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத) அலுவலர்கள் 11 பேர் கடந்த மூன்று வருடகாலத்தினுள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களாக பதவியுயர்வு பெற்று நிறுவனத்திலிருந்து மாற்றலாகிச் சென்றுள்ளதுடன் அதன் காரணமாக குறித்த பதவி வறிதாகியுள்ளது. அதனால் நிறுவனத்தில் அலுவலர்களின் எண்ணிக்கை 88 லிருந்து 77 ஆகக் குறைந்துள்ளது. இத்தகைய நிலைமை காரணமாக சமகாலத்தில் பணியாட்தொகுதியினருள் 10 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றமையானது நிறுவனத்தின் செயலாற்றுகையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளது.

### 06.3 மனிதவள அபிவிருத்தி

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சியின் காலஅளவு | மொத்த முதலீடு (ரூ.) | | நிகழ்ச்சியின் தன்மை (உள்நாடு /வெளிநாடு) | நிறைவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 1 | சாரதிகளுக்கான ஒருநாள் பயிற்சி | 04 | 01 | ரூ.6000.00 | - | உள்நாடு | சாரதி ஒருவரின் தரம் |
| 2 | பொறுப்புநிதியம் தாபிப்பின் சட்டத்தன்மை பற்றிய ஒருநாள் பயிற்சி | எல்லா உத்தியோகத்தர்களும் | 01 | ரூ.118500.00 | - | " | பொறுப்பு நிதியம் தாபிப்பு பற்றிய அறிவு |
| 3 | அரச உத்தியோகத்தர்களின் சம்பள தயாரிப்பு | 02 | 02 | ரூ.26,000.00 | - | " | அரச உத்தியோகத்தர்களின் சம்பள தயாரிப்பு பற்றிய அறிவு |
| 4 | கோவைப்படுத்தல் முறைமை | 30 | ½ நாள் | ரூ.10,000.00 | - | - | உத்தியோகத்தர்களின் கோவைப்படுத்தல்களை முறைமைப்படுத்தல் |
| 5 | Payrool System | 02 | 02 | ரூ.26,000.00 | - | " | சம்பள தயாரிப்பின் போது கணினிமயப்படுத்தப்பட்ட மென்பொருள் பற்றிய அறிவு |
| 6 | உள்ளக கணக்காய்வு | 01 | 02 | ரூ.13,000.00 | - | " | உள்ளக கணக்காய்வு பற்றிய அறிவு |
| 7 | அலுவலக முறைமை | 04 | 02 | ரூ.13,000.00 | - | " | அலுவலக முறைமை பற்றிய அறிவு |
| 8 | அரச உத்தியோகத்தர்களின் சம்பள தயாரிப்பு | 01 | 01 | ரூ.5,000.00 | - | " | அரச உத்தியோகத்தர்களின் சம்பள தயாரிப்பு பற்றிய அறிவு |
| 9 | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 02 | 02 | ரூ.26,000.00 | | | அலுவலக முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| 10 | பொருட்கணக்காய்வு குறித்த பயிற்சி | 30 | ½ நாள் | ரூ.**10**,000.00 | - | " | பொருட்கணக்காய்வு குறித்த அறிவு |
| 11 | தமிழ் மொழி பாடநெறி | 05 | 16 | - | - | - | தமிழ் மொழி பற்றிய அறிவு |
| 12 | அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் தொழில்சார் விருத்தி | 01 | 01 | ரூ.13,000.00 | - | - | அபி.உத். மற்றும் மு.சே. உத்தியோகத்தர்களின் தொழில்சார் விருத்தி பற்றிய அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | ஒழுக்க நடபடிமுறை | 01 | 01 | ரூ.13,000.00 | - | - | நிறுவன ஒழுக்கம் பற்றிய அறிவு |
| 14 | அலுவலக உதவியாளர்களின் கடமைப்பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 02 | 02 | ரூ.13,000.00 | - | - | அலுவலக உதவியாளர்களின் கடமைப்பொறுப்புக்கள் பற்றிய அறிவு |
| 15 | விலைமனுகோரல் செயன்முறை | 50 | ½ நாள் | ரூ.48,000.00 | - | - | விலைமனுகோரல் பற்றிய அறிவு |

## 07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாகப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கப்பாடானது/இணக்கப்பாடற்றது) | இணக்கப்பட்டற்றது எனின் அதற்கான சுருக்க விளக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரிசெய்யும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணக்கிற்கான உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணக்கமானது | - | - |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | - | - |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதன்று. | - | - |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று. | - | - |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று. | - | - |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று. | - | - |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பராமரிப்பு (நி.பி. 445)** | | | |
| 2.1 | 267/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.2 | தனிப்பட்ட வேதனாதி ஆவணங்களை/ தனிப்பட்ட வேதனாதி அட்டைகளை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.3 | கணக்காய்வு கேள்வி ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களைளும் (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்குச் சமர்பித்தல் | இணக்கமானது | - | - |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை ஆவணங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.7 | இன்வென்றிப் பதிவேடுகளை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.8 | கையிருப்பு பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.9 | சேதங்கள்/நட்டங்கள் பதிவேடுகளை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.10 | பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.11 | உப பத்திரிகைப் புத்தகப் பதிவேட்டை (GA - N20) இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 03 | **நிதி நிர்வாகத்திற்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்களை நிறுவனத்தினுள் பரவலாக்கம் செய்தல் | இணக்கமானது | - | - |
| 3.2 | நிதி நிர்வாக அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக நிறுவனத்தினுள் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | இணக்கமானது | - | - |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் இரண்டு உத்தியோகத்தர் ஊடாக அல்லது அதற்கு மேலதிகமாக அனுமதி பெறும் விதத்தில் அதிகாரங்களை ஒப்படைத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதி 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க, அரசாங்க சம்பளத் தாள் மென்பொருளைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டு உட்பட்ட வகையில் செயற்படுதல் | இணக்கமானது | - | - |
| 4 | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | - | - |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய தினத்தில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | - | - |
| 5 | **கணக்காய்வுக் கேள்விகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படும் திகதியில், அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் பதிலளித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 இற்கு இணங்க, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் உப பிரிவிற்கு இணங்க அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134 (3) இற்கு இணங்க, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2009 இற்கு இணங்க, ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை உரிய வருடத்தினுள் நடாத்தியிருத்தல் | இணக்கமானது | | |
| 8 | **சொத்து முகாமை** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைச் சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க, சொத்துக்களை கொள்வனவு செய்தல், அகற்றுதல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 8.2 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்திற்கு இணங்க, அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புக்களைச் செய்வதற்குப் பொருத்தமான தொடர்பாடல் உத்தியோகத்தர் ஒருவர் நியமித்து அந்த உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல். | இணக்கமானது | - | - |
| 8.3 | 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க, பொருட் தொகை மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டு குறித்த அறிக்கைகள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |
| 8.4 | வருடாந்த பொருட் தொகை மதிப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 8.5 | கழித்தொதுக்கப்பட்ட பொருட்களை நி.பி. 772 இற்கு இணங்க அகற்றுதல் | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமை** | | | |
| 9.1 | தொகுதியிலுள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல | இணக்கமில்லை | | ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்திர அறிக்கையை உரிய தேதியில் சமர்ப்பிக்குமாறு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 9.2 | வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கு குறைவான காலத்தில் அகற்றப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 9.3 | வாகனச் சம்பவத் திரட்டுப் புத்தகங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.பி. 103, 104, 109, 110 என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, வாகனங்களின் எரிபொருள் தகனத்தை மீளப் பரிசோதித்தல் | இணக்கமில்லை | | சுற்றறிக்கையின்படி இனிவரும் காலங்களில் செயற்படுமாறு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 9.6 | குத்தகை காலப் பகுதியின் பின்னர், குத்தகை வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்களின் முழுமையான உரிமையை பராதீனப்படுத்திப் பெற்றிருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 10 | **வங்கி கணக்கு முகாமை** | | | |
| 10.1 | உரிய தினத்தில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து சான்றுப்படுத்தி கணக்காய்வுக்குச் சமர்ப்பித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 10.2 | மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் செம்மையாக்கம் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுத்து அந்த மீதிகளுக்கு ஒரு மாத காலத்தினுள் தீர்வு காணப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 11 | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை விஞ்சாத விதத்தில் செலவிடுதல் | இணக்கமானது | - | - |
| 11.2 | நி.பி. 94(1) இற்கு இணங்க வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருட முடிவில் எஞ்சும் ஏற்பாட்டு வரையறைகளை விஞ்சாத விதத்தில் பொறுப்புக்களை ஏற்றல் | இணக்கமானது | | |
| 12 | **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள்** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணக்கமாக இருத்தல் | இணக்கமானது | - | - |
| 12.2 | அறவிடப்படாதுள்ள கடன் மீதிகள் பற்றி காலப் பகுப்பாய்வொன்றைச் செய்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் அறவிடப்படாத கடன் மீதிகளை தீர்த்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாடுக் கணக்கை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வாண்டின் இறுதியில் காசேட்டு மீதியை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பியிருத்தல் | இணக்கமானது | - | - |
| 14.2 | நி.பி. 371 இற்கு இணங்க வழங்கப்பட்ட உள்ளபடியான இடைக்கால கட்டுநிதியை, அந்நோக்கம் முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் தீர்த்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 14.3 | நி.பி. 371 இற்கு இணங்க, அனுமதிக்கப்பட்ட வரையைறையை விஞ்சாத விதத்தில் உள்ளபடியான இடைக்கால கட்டுநியை விடுவித்திருத்தல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதியை, திறைசேரியிந் ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்புநோக்குதல் | இணக்கமானது | - | - |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய பிரமாணங்களுக்கு இணங்க, சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 15.2 | சேகரிக்கப்பட்டிருந்த வருமானத்தை, வைப்புக் கணக்குகளில் வரவு வைக்காது நேரடியாக வருமானத்தில் வரவு வைத்திருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 15.3 | நி.பி. 176 இற்கு இணங்க நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி வரையறைக்குள் பதவியணியை வைத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 16.2 | பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | - | - |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 17 | **பொது மக்களுக்குத் தகவல்கள் வழங்குதல்** | | | |
| 17.1 | தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தகவல் உத்தியோகத்தரொருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையதளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையதளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனம் தொடர்பில் பாராட்டுவதற்கு/ குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 17.3 | தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு இணங்க வருடத்திற்கு இரு முறை அல்லது வருடத்தில் ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 18 | **பிரசைகள் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | 05/2018 மற்றும் 05/2018 (I) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பிரசைகள்/வாடிக்கையாளர் பட்டயமொன்று இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு இணங்க, பிரசைகள்/வாடிக்கையாளர் பட்டயத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவனத்தினால் முறைமையொன்று உருவாக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 19 | **மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கு வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்பொன்றை வழங்குவது மேலே குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் அணைக் 01 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்குமான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல் | இணக்கமில்லை | 2002/2018(*i*) சுற்றறிக்கையின்படி அவசியமில்லை | - |
| 19.4 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியையும் இணங்க மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை உருவாக்குதல், தேர்ச்சி விருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல் என்பன தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல் | இணக்கமில்லை | - | 2025 ஆம் ஆண்டுக்கென நியமிக்கப்பட்டுள்ளார். |
| 20 | **கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்** | | | |
| 20.1 | முன்னைய வருடத்திற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்திருத்தல் | இணக்கமானது | - | - |

**முற்றும்.**